Registered as a news paper, பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT சீமேந்து ரா ம் கோ
(சி-1295)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 05 (03.09.2003) புதன்கிழமை இதழ்: 334

## புலிகளுடன் உருத்திரகுமாரன் பேசியதை அமெரிக்கா குற்றமாகக் கருதவில்லை!

### வெளிவிவகார அமைச்சு அதிகாரி

(வொஷிங்ரன்)

பாரிஸில் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து கலந்துரையாடல் நடத்துவதற்கு, உருத்திர குமாரனுக்கு அமெரிக்கா கட்டளையிடவில்லை. ஆனால், இவ்வாறான கலந்துரையாடலை நடத்துவதை அமெரிக்கா ஒருபோதும் குற்றமாகக் கருதியதுமில்லை.

இவ்வாறு - இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவரும், தெற்காசிய விடயங்களுக்குப் பொறுப்பான அரசியல் மூலோபாயங்களுக்கான நிலையத்தின் பணிப்பாளருமான ரெரெசிற்றா ஸ்காபர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது. சமாதானத்தை விரும்புபவர்கள் கதைப்பதில் பிழை இருப்பதாகத் தெரியவில்லை.

உருத்திரகுமாரன் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடனும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அல்-கொய்டா அமைப்போடு புலிகளை ஒப்பிடவில்லை!

### பிரான்ஸ் பிரதித் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அல்-கொய்டா அமைப்பிற்குத் தடைவிதித்த பிரான்ஸ் அரசு, விடுதலைப் புலிகளுக்கு கூட்டம் நடத்த அனுமதி வழங்கியுள்ளதென்றால், விடுதலைப் புலிகள் அல்-கொய்டா போன்ற ஒரு அமைப்பில்லை என்பதனாலேயாகும்.

இவ்வாறு, பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் - கைல்டி மெய்சோனெல் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் வெற்றியடைய, ஒருநாடு இன்னொரு நாட்டிற்கு உதவுவதில் எதுவித தவறுமில்லை. ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் இலங்கையில் சமாதானம் நிலவுவதற்கு செய்யும் பங்களிப்பைப் போன்று, எமது நாடும் பங்களிப்புச் செய்வதாகவே நாம் கருதுகின்றோம். விடுதலைப் புலிகள் பாரிஸில் பேச்சுக்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைகளின் ஆற்றலை அதிகரிப்பது குறித்து ஆராய

# இந்திய இராணுவ அதிகாரிகள் படைத்தளங்களுக்கு விஜயம்!

## அதிகாரிகளுடன் கலந்தாலோசனை

(கொழும்பு)

**இலங்கை அரசுடன் இந்திய அரசு செய்துகொண்டுள்ள பகிரங்கப்படுத்தப்படாத ஒப்பந்தத்தின்கீழ், இந்திய பாதுகாப்பு அமைச்சு சிறப்பு பிரதிநிதியுடன் இந்திய முப்படைகளைச் சேர்ந்த சிறப்பு படை அதிகாரிகள் குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.**

**இவர்கள் இலங்கையின் முப்படையினருக்கும், விசேட பயிற்சிகளை வழங்குவது குறித்தும், படையினருக்கான வசதிகளை அதிகரிப்பது குறித்தும் விரிவாக ஆராய்ந்து வருகின்றனர்.**

இலங்கையின் பாதுகாப்புத்துறையினருக்கு வழங்கும் பயிற்சி நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு தேவையான பயிற்சிகளையும் இவர்கள் வழங்குவதற்கான சிபாரிசுகளை முன்வைக்கவுள்ளனர்.

அத்துடன் தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரி, சீனன்குடா விமானப்படைத்தளம், திருகோணமலை கடற்படைத்தளம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து, அவற்றின் தரம் குறித்து ஆராய்ந்து உடனடிப் புனரமைப்பு குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதுடன் இலங்கை படையினருக்கு சிறப்பு பயிற்சிகளை வழங்குவது குறித்தும் சிபாரிசுகளை முன்வைப்பார்கள்.

இந்தக் குழுவினர் இராணுவ பதில் தளபதி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தனவுடன் (10 ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பு வந்த இந்தியப் படை அதிகாரிகள் குழு - இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## யப்பானிய தூதுவர் யசுசி அகாஷி அடுத்த வாரம் இலங்கை வருகிறார்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது சம்பந்தமாக ஆராய்வதற்கு, ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி அடுத்தவாரமளவில் இலங்கை வருவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபின்பு, லண்டன் சென்று அங்கு நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்கெய்ம்மை இவர் சந்திப்பார்.

பாரிஸ் நகரில் விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக சபை பற்றிய புதிய வரைபுக (10 ஆம் பக்கம் பார்க்க)

## தென்கொரியாவில் நடைபெறும் பசுபிக் படைத் தளபதிகளின் மாநாட்டில் இராணுவத் தளபதி பலகல்ல பங்கேற்பு

(கொழும்பு)

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல தென்கொரியாவின் தலைநகர் சியோலில் நடைபெறும் பசுபிக் பிராந்திய இராணுவத்தளபதிகள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்றுள்ளார்.

ஐந்துநாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், கலந்துகொள்வதற்காக கடந்த சனியன்று இவர் சியோலுக்கு புறப்பட்டார்.

பொதுவான பாதுகாப்பு பிரச்சினைகளை எதிர்கொள்வதில் பிராந்திய கூட்டுறவுடன் செயற்படுதல் என்ற தொனிப்பொருளிலான இந்த மாநாட்டில், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா, சீனா, (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைக் குழுவிலிருந்து பாலா நீக்கப்பட்ட செய்தி; தமிழ்ச்செல்வன் மறுப்பு!

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் பேச்சுவார்தை குழுவிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாக வெளிவந்த செய்திகளை - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மறுத்துள்ளார்.

எங்களுடைய அரசியல் ஆலோசகர் ஜப்பான் மாநாட்டில் கலந்துகொள்வதாக இருந்தது. அதனால் தான் நாங்கள் பாரிஸில் இந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இன்னும் நெக்கம் அதிகமாகுது!

## தமிழ்ச்செல்வன் குழுவினர் நாளை வன்னி திரும்புவர்!

(பாரிஸ்)

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஆராய்வதற்காக பாரிஸ் சென்றிருந்த அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், நாளை வன்னிக்குத் திரும்பவுள்ள...ர்.

இடைக்கால நிர்வாகத்திற்கான திட்டவரைபினைத் தயாரித்த பின், சுவிற்சர்லாந்துக்கும் சென்றிருந்த இக்குழுவினர் அங்கு பல்வேறு தரப்பினருடனும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர்.

இவர்கள் நாளை வன்னிக்கு திரும்புவதற்கான தமது பயணத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

# தென்மராட்சிப் பிரதேசத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிமூலம் - தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள் என்பன புனரமைப்புச் செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உதயசூரியன் சனசமூக நிலையக் கட்டடப் புனரமைப்பதற்கு 97 ஆயிரம் ரூபாவும், மலசலகூடம் புனரமைப்பதற்கு 48 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும், சர்வசாதன சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும்,

கலைமகள் சனசமூக நிலையத்திற்கு தளபாடம் கொள்வனவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவும்,

அம்பாள் பாலர் படசாலையின் தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (29)

# சிறுவர் உரிமையை மேம்படுத்த தேசிய ரீதியில் நாடகப் போட்டி!

சிறுவர் உரிமையை மேம்படுத்தும் நோக்கமாக- தேசிய ரீதியில் நாடகப் போட்டியொன்று நடைபெறவுள்ளது. இலங்கைக்கான கத்தோலிக்கத் திருச்சபையின் நீதி, சமாதான குழு இந்தப் போட்டியை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு, இந்தப் போட்டிகள் யாழ். மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளின் போது, ஹரித்தாஸ் தேசிய இயக்கத்தின் இயக்குநர் வணபிதா. பேமியன் பெர்ணாண்டோவும் உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாலை 3 மணிக்கு நடைபெறும் இந்தப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் - யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, வெற்றியீட்டிய சிறுர்களுக்கு பரிசில்களை வழங்கவுள்ளார்.


**கலாலயா பயிற்சியகம்**

*மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.*

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

**மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்**

**3 மாத கால**

கேக் ஐஸிங், சமயல்கலை, கூந்தல் அலங்காரம், FABRIC PAINTING பயிற்சிகள்

**6 மாத கால**

உடை தயாரித்தல், பூவேலை, கைவேலை பயிற்சிகள் இத்துடன் கொழும்பிலிருந்து வரும் பிரபல அழகுக்கலை நிபுணரால் 3 நாள்கள் FACIAL அழகுக்கலை வகுப்புக்களும் நடத்தப்படும்.

- ❖ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- ❖ இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.

சனி,ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம் :- 07.09.2003
கிழமை நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 10.09.2003

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 2.00 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

(சி-1434) இயக்குனர்


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**கலைப்பீடம்**
**இராமநாதன் நுண்கலைக்கழக பரீட்சைகள்**
**(இசை, நடனம், சித்தரமும் வடிவமைப்பும்)**

இரண்டாம், மூன்றாம் வருட- இரண்டாம் அரையாண்டு செய்முறைப் பரீட்சைகள் 12.09.2003 திகதியன்று ஆரம்பமாகின்றன.

நான்காம் வருட நுண்கலைமாணி / நுண்கலைமணி (இசை, நடனம்) ஆற்றுகைப் பரீட்சைகள் 04.09.2003 திகதியன்று ஆரம்பாகின்றன.

**பதிவாளர்,**
**02.09.2003** (சி-1436)


**ராஜா** யாழ்ப்பாணம்.

மாதவன், சிம்ரன் நடித்த
**பார்த்தாலே பரவசம்**
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1424)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்
அர்ஜுன் மனிஷா நடித்த
**முதல்வன்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
**LONG KISS GOODNIGHT**
(சி-1425)

**செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**
**ஆயுள் பகுதியின்**
**சகல வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்குமான அறிவித்தல்**

எமது யாழ்.கிளையின் உதவி விற்பனை முகாமையாளராக கடமையாற்றிய திரு.தம்பிஐயா ஜெயசந்திரன் தற்போது எமது கம்பனியுடன் எவ்வித தொடர்பிலும் இல்லை என்பதையும், இத்திகதியின் பின்னர் இவருடன் கம்பனி தொடர்பாகச் செய்யப்படும் எவ்வித தொடர்புகளுக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் கம்பனி பொறுப்பு அல்ல என்பதையும் அனைவருக்கும் இவ்அறிவித்தல் மூலம் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்
"ஆயுள் பகுதி"
560, 2 ஆம் மாடி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/1435)


**சிறுவிளம்பரம்**

**வீடு விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கு சந்தியிலிருந்து 400m தொலைவில் இருபாலை வீதியில் 2 1/2 பரப்பு காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: எஸ்.கலைச்செல்வன், இராமகிஷ்ண மகாவித்தியாலய வீதி, கோண்டாவில் கிழக்கு. (469)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ்.மாவட்டம்

## செப்ரெம்பர் 01 - 07 வரை



**மதிவெடி பொருட்களிலிருந்து நாம் எம்மை பாதுகாப்பதற்கு**
**அபாயமுள்ள பிரதேசங்களை தவிர்த்து நடப்போம்**

அதேநேரம் மிதிவெடி பொருட்களைக் கண்டால் அவற்றிற்கு அருகே செல்வதைத் தவிர்த்து, மற்றவர்களிற்கும் அவ் ஆபத்து சம்பந்தமான தகவலை வழ்குவதோடு மட்டுமல்லாது, உடனடியாகச் சம்மந்தப்பட்டபின்வரும் நிறுவனங்களோடு நேரடியாகவோ அல்லது எங்கள் கிராமத்தலைவர், கிராமசேவையாளர் ஊடாகவோ தொடர்பு கொள்ளுவோம்.

- மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், அரச அதிபர் அலுவலகம் யாழ்ப்பாணம்.
- HALO TRUST நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
- அருகில் உள்ள இராணுவ, பொலிஸ் நிலையம்.

நாம் நமது நாளாந்த தொடர்பாடல் விடயங்களில் இருந்து அந்நியமான பிரதேசங்களில் தொடர்புகளை மேற்கொள்ளும்போது - மிதிவெடி, வெடிபொருட்களைக் காணநேர்ந்தால் அதனை உதாசீனம் செய்யாது, உயர்ந்த மனிதாபிமான நோக்கில் அவ் ஊர்த் தலைவர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு தொடர்புகொண்டு ஆபத்துக்களைத் தடுக்க உதவுவோம்.

இப்பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் எவ்வேளையிலும் மக்களின் நலன் கருதி செயற்பட தயாராக இருப்பதானால் - அவற்றை எங்கள் நிறுவனமாகக் கருதி அவர்களுடன் நேசக்கரம் நீட்டி அவர்கள் சேவையைப்பெற்று, எங்களை நாம் பாதுகாத்துக் கொள்வோம்.

**மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் - யாழ்ப்பாணம்**

(சி.1421)

### தென்மராட்சி மறவன்புலோப் பகுதியில்

# விவசாயத்தை மேற்கொள்ள பாதை திறக்காத படையினர்

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்கு - மறவன் புலோ பகுதியில், சென்றவாரம் 1000 ஏக்கர் வயற்செய்கைக்கு படையினர் அனுமதியளித்திருந்தும், இந்த வயற் பகுதிகள் மிகுந்த அறுகுத்தரவைக ளாகவே காணப்படுகின்றன. அதனை விளைநிலமாக்குவதற்காக உழுது பண்படுத்துவதற்கு - இனனமும் படையினரால் அனுமதியளிக்கப்பட வில்லை. இங்கு செல்வதற்கு படை யினர் சரியான பாதையை இன்னும் திறந்துவிடவில்லை எனவும், விவ சாயிகள் கவலை தெரிவித்தனர்.

தற்போது, குடாநாட்டில் பெய் துள்ள மழையைப் பயன்படுத்தி, நிலத் தைப் பணபடுத்தாவிட்டால், தாம் வயற் செய்கையை மேற்கொள்ளாமல் விட வேண்டிவரும் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (37)

# மணலாறில் உள்ள காவலரண் தொடர்பாக கண்காணிப்புக்குழு பதுமனை சந்திக்கும்!

மணலாறு - ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள பங்கர் அமைத்தது தொடர்பாக மீண்டும் சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.

விடுதலைப் புலிகளின் பதுங்கு குழி ஒன்று மணலாறு ஆனைவிழுந் தான் பகுதியில் காணப்படுகின்றது. அதை அகற்றவேண்டும் என்றுகூறி, போர் நிறுத்த கண்காணிப்புக் குழு விடம் படைத்தரப்பால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னரே அப்பகுதி யில் பதுங்குகுழி அமைந்திருந்தது என, விடுதலைப் புலிகளால் கூறப் பட்டது. அது போர்நிறுத்த ஒப்பந்த மீறல் இல்லை என தெரிவிக்கப்பட் டிருந்தது.

இதற்கு போர்நிறுத்த கண்கா ணிப்புக்குழுவிடம் படைத்தரப்பு ஆட் சேபம் தெரிவித்திருந்தது. இந்த விட யம் தொடர்பாக மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்ற கோரிக்கை படைத்தரப்பால் விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் விசாரணை முடிந்தபோது, போர் நிறுத்த கண் காணிப்புக்குழு - மணலாற்று பகுதி யில் உள்ள பதுங்குகுழியைத் தினந்தோறும் சென்றுபார்வையிட வேண்டும் தீர்மானிக்கப்பட்டது.

அம் முடிவின்படி, போர்நிறுத்த கண்காணிப்புக்குழு 5 நாள் வரை தொடர்ச்சியாக பதுங்குகுழியைப் பார்க்கச் சென்றது. 5 ஆம் நாள் விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவை பார்வையிடாது தடுத்தனர் எனவும், இந்த விடயம் தொடர்பாக திருமலை மாவட்டக் கட்டளைத் தள பதி பதுமனிடம் போர்நிறுத்த கண் காணிப்புக்குழு சந்திப்பொன்றை நடத் தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அப்பாவி இளைஞர்களை கொலைக்களத்திற்கு அனுப்புவதற்கு ஜே.வி.பி. மீண்டும் முயற்சிக்கிறது!

### மத்திய மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இளைஞர்களை அநியாயமான முறையில் பலிகொடுக்கும் வகை யில், ஜே.வி.பி செயற்பட்டு வருகி றது. கடந்த காலங்களில் ஆயிரக் கணக்கான அப்பாவி இளைஞர்க ளைக் கொலைசெய்த இந்த இயக் கம், மீண்டும் தனது கொலைக் கலா சாரத்தைப் புதுப்பிக்க முயற்சித்து வருகிறது என, மத்திய மாகாண முதலமைச்சர் வசந்த அலுவிகார தெரிவித்துள்ளார்.

கடந்த தசாப்தகால யுத்தத் தினால், பலியான எமது நாட்டு இளைஞர்களின் எண்ணிக்கையை விட, அதிகளவு இளைஞர்களை மீண்டும் பலியிட்டு, பாரியதோர் இரத்தக் களரியை நாட்டில் மீண் டும் ஏற்படுத்த ஜே.வி.பியினர் முயன்று வருகின்றனர்.

இதனைப் புரிந்துகொண்டு, அவர் களது பாதையில் சென்று, தம்மைத் தாமே அழித்துக்கொள்ளும் செய லில் இளைஞர்கள் இணைந்துவி டாது, அவர்களைக் காப்பாற்றவேண் டிய பாரிய கடமை எமது நாட்டின் அனைத்து மக்களுக்கும் உண்டு.

மக்கள் நலனுக்குரிய சேவை கள் எவையும் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு, அரசு மீது கூறப் படுகின்றபோதிலும், அதில் எவ்வித உண்மையுமில்லை.

ஏனெனில், யுத்த மேகம் சூழ்ந்தி ருந்த எமது நாட்டில், சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதன்மூலம் மக்களின் அமைதியான வாழ்விற்கு வழி சமைக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மக்கள் நலன்கருதி செயற்பட்டு வரும் அரசை, சிலர் நினைப்பது போல் வீழ்த்திவிடமுடியாது. இப் போது இருப்பதைவிடவும், கூடுத லான வாக்குப் பலத்துடன் நாம் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவோம். எனவே- எந்தச் சக்தியாலும், எம்மை வீழ்த்திவிடமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## வீதி விளக்குகள் பொருத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைக்கும் - மல்லா கத்திற்கும் இடைப்பட்ட கே.கே.எஸ் வீதிப் பகுதியில், பொருத்தப்பட் டுள்ள வீதி விளக்குகள் ஒளிரா மையால், வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தெல்லிப்பளை துர்க் கையம்மன் ஆலய மஹோற்வத் திற்காக, பெருமளவு பக்தர்கள் இந்த வீதியூடாகவே இரவுவேளைகளில் பயணிப்பதால், வீதிகளில் வெளிச் சம் இன்மையால் - வாகனங்களும், பாதசாரிகளும் விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ் வீதி விளக்குகள் சீராக ஒளிர்வதற்கு, மின்சாரசபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் தெரி விக்கின்றனர்.

# பொலிஸ் வானில் சென்று நுகேகொடவில் கொள்ளை!

(கொழும்பு)

கொழும்பு - நுகேகொட பொலிஸ் அதிகாரிக்குச் சொந்தமான வானைக கடத்திச்சென்ற நபர்கள், கொள்ளைச் சம்பவமொன்றில் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளையர்கள் - பொலிஸ் அதிகாரியின் வானைக் கடத்திச்சென்று, ஒன்றரை லட்சம் ரூபா நகைகளைக் கொள்ளையிட்டுள்ளனர்.

பின்னர், பொலிஸ் அதிகாரியின் வான் - மீரிஹான என்ற இடத்தில் கைவிடப்பட்டநிலையில் காணப்பட்டதாகத் தெரியவருகிறது. மேலதிக விசாரணைகளை நுகேகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







மாகாண கல்வி அமைச்சின் முன்பாக நேற்று முன்தினம் போராட்டம் நடத்திய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கத்தை நாடாளுமன்ற உறுப் பினர்கள் இரா.சம்பந்தன், துரைரட்ணசிங்கம், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் சந்தித்துப் பேசுவதை முதற்படத்திலும், போராட் டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாடு வதை இரண்டாவது படத்திலும், மறியல் செய்யும் ஆசிரியர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# எதிர்க்கட்சி உறுப்பினரின் ஜீப்வண்டி தீக்கிரையானது

அலகர பிரதேசசபை பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான ஜானக நளின்குமாரவுக்குச் சொந்த மான ஜீப்வண்டி - இனந்தெரியா தவர்களால் தீக்கிரையாக்கப்பட் டுள்ளது.

அந்த ஜீப்வண்டி, கராஜ் ஒன் றில் திருத்த வேலைக்காக விடப் பட்டு நிற்கையிலேயே, தீக்கிரை யாக்கப்பட்டது.

இரண்டு லட்சம் பெறுமதியான இந்த ஜீப்வண்டி - அரசியல் பழி வாங்கலுக்காகத் தீக்கிரையாக்கப் பட்டதாக, ஜீப்புக்குச் சொந்தக் கார ரான ஜானக நளின்குமார - பொலி ஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

## 200 இடங்களில் சமாதான வேலைத்திட்டம்

இலங்கையில் 200 இடங்களில் சமாதானம் பற்றிய வேலைத்திட் டத்தை முன்னெடுத்துக் செல்வதறகு, ஐக்கிய தேசிய முன்னணியின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

இதன் பிரகாரம் - நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதியிலுள்ள உள்ளூராட்சி, நகரசபைகளின் அபி விருத்தியை முன்னெடுப்பதற்கு நாடா ளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்துவார்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தத் திட்டத்துக்கு மூன்று கோடி முப்பத்துநான்கு இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

# நெல் கொள்வனவிற்கு அரசு மானியம் வழங்கும்

இலங்கை - அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது. இத னால், அரிசி ஏற்றுமதிக்காக - நெல் லைக் கொள்வனவு செயயும் கம்பனி களுக்குக் கிலோ ஒன்றுக்கு எட்டு ரூபா வீதம் மானியம் வழங்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரக் கொள்கை குழு வில் அங்கம் வகிக்கும் அமைச்சர் களுக்கும் திறைசேரி அதிகாரிகளுக்கு மிடையில் நடைபெற்ற பேச்சுவார்த் தையை அடுத்தே, இவ்வாறான முடி வெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, உள்நாட்டு விவசா யிகளைப் பாதுகாக்கும் வகையில், நெல் இறக்குமதி வரி - ஏழு ரூபாவி லிருந்து ஒன்பது ரூபாவாக அதிக ரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெரும்போகத்தின்போது கொள் வனவு செய்யப்பட்ட பெருமளவு அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தோடு, இவற்றை ஏற்றுமதிக்காகக் கொள்வனவு செய்யும் கம்பனிகளை ஊக்குவிக்கவே மானியம் வழங்கப் படவுள்ளது.

இது தொடர்பாகச் சில கம்பனிக ளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட் டுள்ளதோடு, அடுத்தவாரம் முதல் மேற்படி கம்பனிகள் நெல் கொள் வனவு செய்யவுள்ளன.

## 'ஐலன்ட்' செய்தியாளருக்கு ஐ.நா. விருது

ஐக்கிய நாடுகள் செய்தியாளர் கள் சங்கத்தினால் வழங்கப்படும் 'டக் ஹமார்ஸ்க் கோல் - 2003' விருது தி ஐலன்ட் பத்திரிகையின் செய்தியாளரான நாமினி விஜேதா ஸவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மிகுந்த போட்டிக்கு மத்தியிலேயே இவர் இந்த விருதைப் பெற்றிருப்ப தாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புதிய வரவு —செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு பல நன்மைகள் கிடைக்கும்!

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

அரசு சமர்ப்பிக்கவுள்ள வரவு- செலவுத்திட்டத்தில், மக்களுக்குப் பலதரப்பட்ட வகைகளிலும் நன்மை யளிக்கும் சரத்துக்கள் உள்ளடக் கப்பட்டுள்ளன. இதன்மூலம் நாட்டு மக்களின் எதிர்காலம் சுபீட்சமுடை யதாக இருக்கும் என்பதை உறுதி யாகக் கூறமுடியாது.

இவ்வாறு கிராமிய பொருளாதார அமைச்சரும், பிரதி நிதியமைச்சரு மான பந்துல குணவர்த்தன - வெலி மடை பஸ்நிலைய மைதானத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அரசுக்கு இன்று கிடைத்துவரும் வருமானம், நாம் பெற்றிருக்கும் கட னுக்கு வட்டியைச் செலுத்துவதற்கே போதுமானதாகவில்லை. இதனால், பாரியளவில் சமூகநல மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்க முடியா துள்ளது.

அரசின் இன்றைய நிலையை மக்கள் பூரணமாக உணரவேண்டும். இதை மக்கள் நன்கு அறிந்திருப்பதி னால்தான், நெருக்கடிகளுக்கு மத்தி யிலும் மக்கள், அரசுமீது பூரண நம் பிக்கைவைத்து, அமைதியாக இருந்து வருகின்றனர். இச்செயற்பாடு - எமக குப் பெரும்மகிழ்ச்சியைத் தருகின்றது.

பழவகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதினால், பெருமளவி லான வருமானம் எமது நாட்டிற்குக் கிடைத்துவருகின்றது. மற்றும், விவ சாயிகளின் விவசாயப் பொருட்க ளுக்குச் சிறப்பான சந்தை வசதி களை ஏற்படுத்திக்கொடுக்கவும் நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள

# உயர் பாதுகாப்பு வலயங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றது!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவத்தினரால் அதியுயர் பாதுகாப்பு வலயம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் பற்றிய விபரங்களை, பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் திரட்டும் முயற்சியில் - யாழ். மாவட்ட அரச செயலகம் தற்போது ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரச செயலகம் - ஒவ்வொரு பிரதேச செயலருக்கும் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் - உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியின் விஸ்தீரணம், அதற்குள் அடங்கும் கிராம சேவையாளர் பிரிவுகள், கிராமத்தின் பெயர் போன்ற விபரங்களை அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், குடாநாட்டில் பல விவசாய நிலங்களும், பொதுமக்கள் குடியிருப்புக்களும் - படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.



கொக்குவில் காந்திஜி கிராமத்தில், வறிய மாணவர்களுக்கான, தொழிற் பயிற்சி வகுப்புக்கள் - தென்னிந்திய திருச்சபையினால் அண்மையில் நடத்தப்பட்டபோது, வைபவத்தில் கலந்துகொண்ட பேராயரின் பிரதிநிதி ஏ.சி.ஆனல்ட்- மங்கள விளக்கேற்றுவதையும், தொழிற்பயிற்சி மேற்பார்வையாளர் ஏ.எஸ்.தே. குணானந்தன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

யாழ். மாவட்டத்திலுள்ள படையினருக்கு

# எயிட்ஸ் நோய் தடுப்பு பற்றி விழிப்புணர்வு கருத்தரங்கு!

(வண்ணை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் 'எயிட்ஸ் நோய்' தடுப்பு விழிப்புணர்வு நிகழ்சித் திட்டத்தின் கீழ் - கடந்த ஞாயிற்றுக்கிழமை நகரில் நிலைகொண்டுள்ள 51 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினருக்கு கருத்தரங்கு நடத்தப்பட்டதுடன், விடியோப் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள், படைமுகாம்களில் - எயிட்ஸ்நோய் தடுப்புப் பற்றிய கருத்தரங்கை மேற்கொள்ளவுள்ளதாக, அகதிகள் புனர்வாழ்வு நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

# சந்திரமௌலீச வித்தியாலயத்திற்கு 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு!

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலைக்கு - அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கென 50 ஆயிரம் ரூபா, பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர், அபிவிருத்திச் சங்கம், பெற்றோர் ஆகியோரின் கோரிக்கைக்கு இணங்கவே, இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி மூலம் - பாடசாலைக்குத் தேவையான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பாடசாலையின் அதிபர் செ.சிவஞானம் தெரிவித்தார். (24)

## சின்னஞ்சிறு செய்திகள்

### அடைக்கல அன்னையின் அபிஷேக விழா

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள அடைக்கல அன்னை ஆலய அபிஷேக 75 ஆம் ஆண்டு பெருவிழாவில் - எதிர்வரும் திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு நன்றித் திருப்பலி - யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தினால் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

அன்று மாலை 5.30 மணிக்குத் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது. இந்தப் பவனியானது 3 ஆம் குறுக்குத்தெரு, வேம்படி வீதி, 2 ஆம் குறுக்குத் தெரு, ஆஸ்பத்திரி வீதி, மாட்டின் வீதி, மீண்டும் வேம்படி வீதி, 5 ஆம் குறுக்குத் தெரு, தேவாலய வீதி, 4 ஆம் குறுக்குத் தெரு ஆகிய வீதிகளால் வலம்வந்து, ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

### சனசமூக நிலையம் புனரமைப்பு

(மட்டுவில்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது, முற்றாகச் சேதமடைந்திருந்த மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையம் தற்போது சுமார் 7 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவருகிறது.

ஜப்பானிய தூதரகத்தின் நிதியுதவியுடன் - 'த அசோசியேசன்ஸ் ஒப் மெடிக்கல் டொக்ரேஸ் ஒப் ஏசியா' (AMDA) என்ற நிறுவனத்தினால் - இந்தப் புனரமைப்பு வேலைகள் செயற்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

### கல்வியியற் கல்லூரியில் சித்திரக்கலை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சித்திரக்கலைத்துறையினால் அறிவிக்கப்பட்ட, க.பொ.த உயர்தரத்தில் சித்திரக்கலையை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு - விசேட வழிகாட்டுகை வகுப்புக்கள் - எதிர்வரும் 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு ஆரம்பித்து, பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை இடம்பெறும். விண்ணப்பித்த மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### பொது அறிவுப் போட்டி

பளைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கணித, விஞ்ஞான போட்டியும், பொது அறிவுப் போட்டியும் நாளை நடைபெறவுள்ளது என, கோட்டக்கல்வி அதிகாரி அ.கைலாயப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதில், பங்குபற்ற வேண்டிய பாடசாலைகள் - தமது விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை - பளைக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் தினக்கட்டுரைப் போட்டி - இம் மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை, பாடசாலை அதிபர்கள்- பளைக கோட்டத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோட்டக்கல்வி அதிகாரி க.கைலாயப்பிள்ளை கேட்டுள்ளார். (115)

# சிறுவர்களுக்கான நாடக எழுத்துருவாக்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயற்திறன் அரங்க இயக்கம்- சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் - ஆர்வலர்கள் எவரும் பங்குபற்றமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உளநல மேம்பாட்டை அடிப்படையாகக்கொண்டு, சிறுவர் உளப்பாங்கிற்கு ஏற்ப, 30 நிமிடங்கள் ஆற்றுகை செய்யக்கூடியதாகவும், சிறுவர்கள், பார்வையாளர்களை இலக்காகக்கொண்டும் ஆக்கங்கள் எழுதப்படவேண்டும்.

எழுத்துருக்கள் எதிர்வரும் 25.09.2003 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவகையில்- 'செயற்திறன் அரங்க இயக்கம், அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி' என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு படைப்பாளியும், தமது சுய விபரத்தை - தனியே ஒரு தாளில் எழுதி அனுப்புதல் வேண்டும்.

இந்தப் போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு - 1 ஆம் பரிசாக 3000 ரூபாவும், 2 ஆம் பரிசாக 2000 ரூபாவும், 3 ஆம் பரிசாக 1000 ரூபாவும், சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் புனர்வாழ்வு கழகத்தினரால் நலன்புரிநிலைய கூரை வேயப்பட்டது

(மல்லாகம்)

கந்தரோடையில் அமைந்துள்ள பிள்ளையார் நலன்புரி நிலையத்தின் கூரைகள்- தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த முகாமில் 28 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். மாரிகாலம் வரப்போகின்றமையால், கூரைகளை வேய்ந்து தருமாறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு எடுத்துக்கூறியும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதநிலையில், இவர்களின் அவலநிலையைப் போக்கும் முகமாக - தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (68)

# திருநெல்வேலிச் சந்தையில் சந்தை காரியாலயம் திறப்பு!

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேசசபையினால்- திருநெல்வேலிச் சந்தையில், பொதுச சந்தைக் காரியாலயம் - நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் செல்வரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சந்தையில் இடம்பெறுகின்ற பிரச்சினைகள் மற்றும் வியாபாரிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்து- இந்தக் காரியாலயத்தில் முறைப்பாடுசெய்யமுடியும் எனவும், முறைப்பாடு செய்யவிரும்பும் அனைவரும் இந்தக் காரியாலயத்தில் - நேரிலோ அல்லது அதற்கென அமைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுப் பெட்டியிலோ தமது முறைப்பாடுகளைச் செய்யலாம் எனவும், பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்தார்.

திருநெல்வேலி சந்தை தொடர்பான பிரச்சினைகள், முறைப்பாடுகள், விசாரணைகள் என்பன - இதுவரை காலமும் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்திலேயே இடம்பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : அ.சயந்தன்
முகவரி : ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ச.ரதுஷன்
முகவரி : சுவிற்சர்லாந்து

ஆறாவது அகவையில்



பெயர் : ந.கஜராஜ்
முகவரி : 5 ஆம் வட்டாரம், நெடுந்தீவு

ஏழாவது அகவையில்




பெயர் : றே.-லவ்ஷிகா
முகவரி : 32, சந்தனமாதா லேன், பாண்டியந்தாழ்வு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------
பெற்றார் ஒப்பம்

# சமூகக்கல்வியும் வரலாறும்
## சார்க் அமைப்பு




✪ சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள்

| நாடுகள் | தலைநகரம் | நாணயம் |
|---|---|---|
| 1. இலங்கை | கொழும்பு | ரூபா |
| 2. இந்தியா | புதுடெல்லி | ரூபா |
| 3. பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் | ரூபா |
| 4. பங்களாதேஷ் | டாக்கா | டாக்கா |
| 5. நேபாளம் | காத்மண்டு | ரூபா |
| 6. பூட்டான் | திம்பு | நருஸ்ட்ரம் |
| 7. மாலைதீவுகள் | மாலே | ரூபியா |

✪ சார்க் அமைப்பின் ஆரம்பம்
1985 ஆம் ஆண்டு
பங்களாதேஷ் ஜனாதிபதி ஷியாஉல் ரகுமான் என்பவரின் முயற்சியால் உருவாக்கப்பட்டது.

✪ தலைமைச் செயலகம் அமைந்துள்ள நாடு.
நோபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில்.
சாவ் (Saf) போட்டிகள்/ தெற்காசிய விளையாட்டுப் போட்டி சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கிடையில் நடைபெறும் போட்டி ஆகும்.
1. சாவ் போட்டி 2 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும்.

✪ சாரக் உச்சி மாநாடு, இடையிடையே நடைபெறாமைக்கான காரணம.
1. இநதியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான முரண்பாடுகள்.
2. இந்திய இராணுவத்தினர் இலங்கையில் இருக்கும்வரை சார்க் மாநாடு நடைபெற ஒத்துழைக்கமாட்டேன் என இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா கூறியமை.


✪ சார்க் மகாநாடு நடைபெற்ற இடங்கள்

| ஆண்டு | மாநாடு | நடைபெற்ற இடங்கள் |
|---|---|---|
| 1985 | 01 | பங்களாதேஷ் |
| 1986 | 02 | இந்தியா |
| 1987 | 03 | நேபாளம் |
| 1989 | 04 | பாகிஸ்தான் |
| 1990 | 05 | மாலைதீவு |
| 1991 | 06 | இலங்கை |
| 1993 | 07 | பங்களாதேஷ் |
| 1995 | 08 | இந்தியா |
| 1996 | 09 | மாலைதீவு |
| 1998 | 10 | இலங்கை |
| 2002 | 11 | நேபாளம் |


✪ சார்க் அமைப்பு எதிர்நோக்கும் பிரச்சினைகள்.
1. அங்கத்துவ நாடுகளின் இனம் சார்ந்த முரண்பாடு.
2. அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவினம்.
3. குடித்தொகையும் பெருக்கமும்.
4. இந்தியாவின் மேலாதிக்கம்.
5. சர்வதேச வல்லரசுகளின் ஆதிக்கம்.

**தொகுப்பு த.சிவகுமார்** (தொடரும்...)

## க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை மாதிரி வினாத்தாள்




1. சுருக்க: $0.1 \times 0.001/0.01$
2. ஏறுவரிசைப்படுத்துக: 3/4, 4/5, 2/3
3. பொ.ம.சி காண்க: $4x, 8xy, 6xy^2$
4. சுருக்குக: $(2-x)(3-4x)^2$
   சுருக்குக: $2a/3 + a/6 - 3a/8$
6. உருவில் x இன் பெறுமானம் யாது?
7. தீர்க்க: $2x/3 - 3x/4 = 1$
8. மடக்கை வடிவில் தருக. $243 = 3^5$
9. 14cm விட்டமுடைய வட்டத்தின் பரப்பளவு யாது?
10. 8-20+15-(-25) ஐ சுருக்குக.
11. (x-2)2 இன் விரிவு யாது?
12. 5/7 ஐ தசம எண்ணாக தருக
13. 43.675 ஐ கிட்டிய இரண்டாம் தசமதானத்திற்குத் தருக.
14. $x = 3, y = (-2)$ ஆயின், $x^y \times y^5$ இன் பெறுமதி யாது?
15. (0,2) (3,8) ஆகிய புள்ளிகளினூடு செல்லும் கோட்டின் சமன்பாடு தருக.
16. 1,3,5,7 .... 99 எனும் எண்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
17. 3481 இன் வர்க்க மூலத்தைக் காண்க.
18. கோடாத இருதாயக்கட்டைகளைச் சுண்டிப்போடும்போது, கிடைக்கும் எண்களின் கூட்டுத்தொகை 10 அல்லது 10 இலும்கூட வரும் நிகழ்தகவு என்ன?
19. (AnB) U (BnC) ஐ வென் உருவில் காட்டுக.
20. ஒரு வியாபாரி தான் ரூபா 800 இற்கு வாங்கிய பொருளுக்கு 10 % இலாபம் வைத்து விலை குறித்து, குறித்த விலையில் 10 % கழிவு கொடுத்து விற்றால் விற்ற விலை என்ன?
21. சதுரத்தின் ஏதாவது ஐந்து பண்புகள் எழுதுக.
22. 10 % பங்குலாபம் கொடுக்கும் 10 ரூபாய் பங்குகளில் 20 ஐ ஒருவன் ரூபா 12 படி வாங்கினான். அவனது முதலீட்டுக்கு இலாபம் எத்தனை நூற்றுவீதம் யாது?
23. ஒரு வட்டத்தின் மையத்திலிருந்து 12cm தூரத்திலுள்ள நாணின் நீளம் என்ன?
24. படத்தில் QR = 12cm, ST = 8cm, PS = 4cm, PT = 6cm, QS//ST ஆயின், SQ, TR என்பவற்றின் நீளங்களைக் காண்க.
25. 13,37,60,22,34,29,37,45,49 என்பவற்றின் ஆகாரம், இடையம், இடை என்பவற்றைக் காண்க.
26. $A = 2r(r+l)$ எனும் சூத்திரத்தில் r இனைஎழுவாயாக தருக.
27. காரணி பற்றிய அறிவைப் பிரயோகித்து சுருக்குக. 73.82 - 26.22
28. அருகிலுள்ள படத்தில் O வட்டத்தின் மையம் AOC = 140° ஆயின் ADC யின் பெறுமதியை காண்க.




29. பல்கோணி ஒன்றில் அகக்கோணம் ஒன்றின் பெறுமதி 150° ஆயின், அப்பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கையைப் காண்க.
30. $a+3b = 18$ எனும் ஒருங்கமை சமன்பாடுகளை தீர்க்காமல், $2a - b = 8$ (a-4b) இன்பெறுமதியைக்காண்க.

**தொகுப்பு: S.S.தண்ணன்.**

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்



## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்

01. "பாலைப்போல நிலவு வானில் பவனி வரப்போகுது." இவ் வரிகள் கூறுவது பாலைப் பற்றி எனில், பவனி என்ற சொல்லின் கீழ்க் கீறிடுக. நிலவு பற்றி எனில், போகுது என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக.

02. பொருத்தமற்றதன் கீழ்க் கீறிடுக.



1. இது ஒரு தனியார் வாகனம்.
2. பொதுமக்கள் இதில் பயணம் செய்வர்.
3. பொருட்கள் ஏற்றிச் செல்லப் பயன்படும்.
4. இது அரசிற்குச் சொந்தமானது.

03. "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு"
இவ்வரிகள் கூறுவது பூமியைப் பற்றி எனில், கைமன்ணளவு என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. கல்வியைப் பற்றியது எனில், கல்லாதது என்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.

எங்கள் வீட்டு நாய்க்குட்டி 1)........................ நிறமுடையது. அதனால் அது இரவில் நன்றாகத் தெரியும். ஒரு நாள் இரவு திடீரென மின்சாரம் 2)........................ போய் விட்டது. இதனால் வீடுமுழுவதும் 3)................ விட்டது. ஆனாலும் எங்கள் நாய்க்குட்டி நன்றாக ஓடி விளையாடுவதைக் காணமுடிந்தது. நாய்க்கு இரவிலும் 6)................ உண்டு.

04. முதலாவது கீறிட்ட இடத்துக்குப் பொருத்தமான சொல்.
1. கறுப்பு  2. வெள்ளை  3. மண்ணிறம்

05. இரண்டாவது கீறிட்ட இடத்துக்குப் பொருத்தமான சொல்.
1. கழன்று  2. இல்லாமல்  3. ஓடிப்


06. மூன்றாவது கீறிட்ட இடத்துக்குப் பொருத்தமான சொல்.
1. வெளிச்சம் வந்தது  2. இருண்டு  3. எரிந்து

07. நான்காவது கீறிட்ட இடத்துக்குப் பொருத்தமான சொல்.
1. கண்  2. மணம்  3. பார்வை


08. மயூரன் காலையில் தன் தந்தையுடன் வயலுக்குச் சென்று அவருக்கு உதவுவான். அதன் பின் வீடு வந்து உணவு அருந்தி விட்டுப் பாடசாலைக்குச்செல்வான். இதிலிருந்து நாம் அறிவது,
1. மயூரன் ஒரு கெட்டிக்கார மாணவன்.
2. மயூரன் ஒரு விவசாயியின் மகன்.
3. மயூரன் ஒரு ஆசிரியன்.

09. வாகன விபத்தொன்றில் தந்தையை இழந்த பாலன், தன் தாயின் கவனிப்பில் வளர்ந்தான். மிகநன்றாகப் படிக்கக் கூடிய பாலன், கடையொன்றில் சேவை செய்ய நேரிட்டது கொடுமையே.
1. பாலன் ஒரு பாடசாலை மாணவன்.
2. பாலனின் தந்தை அகால மரணமடைந்தார்.
3. தாயார் - பாலனைக் கவனிப்பதில்லை.

10. ஆகாய வழிப்பயணத்தின் படத்தின் இலக்கத்தினை வெற்றிடத்தில் எழுதுக.





11. பின்வரும் படங்களில் பொருத்தமான சோடிகள் காணப்படும் படத்தின் இலக்கத்தினை வெற்றிடத்தில் எழுதுக.




(..................)

❖ இலக்கம் 12 - 15 வரையுள்ள வினாக்களில் பொருத்தமற்ற படத்தின் இலக்கத்தினை எழுதுக.

12.




(..................)

13.



(..................)

14.



(..................)

15.

| 49 | 22 | 16 | 36 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |

(..................)

❖ வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து வெற்றிடத்தில் எழுதுக.

16. சிறுவன் மரத்தில் ஏறி .................................. பழத்தைப் பறித்தான்.
1) கிளையை வெட்டி.
2) கிளையை வளைத்து.
3) கிளையை வெட்டாது.

17. குமுதா மலர்களை .................................. வைத்து வணங்கினாள்.

1. மகிழ்ச்சியோடு 2. கருணையோடு
3. பக்தியோடு

18. விவசாயி கன்றை நட்டு ........................ பராமரித்தான்
1. புற்களைப் பிடுங்கி 2. அக்கினி மூலை
3. வாயு மூலை

19. ஞானசுந்தரம் தன் வீட்டிலிருந்து வலது பக்கமாக வடக்கு நோக்கி செல்கிறான். பின் கிழக்குத் திசை நோக்கி நடக்கிறான். இப்போது அவனது வீடு இருக்கும் திசை.
1. ஈசான மூலை 2. அக்கினி மூலை
3. வாயு மூலை


20. என்னி மிருந்த பணத்தில் எண்பது ரூபாவை வாங்கியதும், இருவரின் பணமும் சமமாக இருந்தது. என்னிடம் முதலில் இருந்த பணம்.
1. நாற்பது ரூபா 2. எண்பது ரூபா
3. நூற்றிப்பத்துரூபா

21. எனது தாயாரும், மாலாவின் தாத்தாவும் சகோதரர்கள். எனவே, மாலா எனக்கு என்ன முறையாக இருக்கலாம்?
(a) மகள் (b) மருமகள்
(c) பெறாமகள் (d) தங்கை

இதில் தவறானது
1. (a) மட்டும் 2. (b) மட்டும் 3. (c) மட்டும்


❖ பின்வரும் விளக்கங்கள் நான்கிற்கும் பொருத்தமான படத்தினை தெரிவு செய்து அதன் இலக்கத்தை எழுதுக.

22.




1. இது கிறிஸ்தவ ஆலயம். (..........)
2. இங்கு மாணர்களும் வருவார்கள்.
3. இங்கு இறைவழிபாடு இடம்பெறும்.
4. தூய்மை அதிகம் பேணப்படும்.

23.




1. இது ஒரு தனியார் வாகனம். (..........)
2. அதில் பொதுமக்கள் பயணம் செய்வர்.
3. இதில் ஓட்டுநர் இருப்பார், நடத்துநர் இருப்பார்.
4. தரைவழிப் போக்குவரத்துச்சாதனம்.


24.



1. இது ஒரு விலங்கு. (..........)
2. காடுகளில் அதிகம் திரியும்.
3. இதற்கு நீண்ட கொம்பு உண்டு.
4. புள்ளி நிறமானது.


❖ பின்வரும் உருக்களுள், சமச்சீர் அச்சு வரைய முடியாத உருவைத் தெரிந்து அதன் இலக்கத்தை எழுதுக.

25.



(1) (2) (3) (4)


26.



(1) (2) (3) (4)

❖ கீழ் உள்ள வினாவில் 4 ஆவது உருவுக்குப் பொருத்தமான வாறு 2 ஆவது உருவை நிழற்றுக.


27.



(1) (2) (3) (4)


❖ இலக்கம் 28-30 வரையுள்ள வினாக்களுக்கு வெற்றுக் கூடுகளுக்குரிய இலக்கத்தை /எழுத்தை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

28.





(1) 40 (2) 10 (3) 08

29.




(1) 13 (2) 28 (3) 17

30.




(1) அ (2) வா (3) பூ

(தொடரும்....)

த.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd
ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்.

இங்கே மடிக்கவும்




# க.பொ.த [சாதாரண] மாணவர்களுக்கான வழிகாட்டற்தொடர்

## விஞ்ஞானம்

**சென்ற 13.08.2003 ஆம் திகதி வெளிவந்த வினாப்பத்திரத்தின் தொடர்ச்சி...**

08. இலத்திரனியல் கருவிகளின் பாவனை - நவீன உலகிலே எங்கும் பரவலாகியுள்ளது. மனித நாகரிகம் - கணனியுகம் நோக்கிக் கொண்டு செல்லப்படவும், தகவல் தொடர்புத்துறையிலே இணையம் இணைந்து கொண்டு, பூகோள கிராமம் எனும் எண்ணக்கரு கட்டியெழுப்பப்படவும் பெரும் பங்காற்றியது இலத்திரனியலாகும்.




1. இலத்திரனியல் சுற்றுக்களில் பயன்படுத்தப்படும் அடிப்படை துணைச் சாதனங்களின் குறியீடுகள் மேலே தரப்பட்டுள்ளன. அவற்றை இனங்காண்க.
2. (A), (C), (D) ஆகியவற்றின் பிரதான தொழிற்பாடு ஒவ்வொன்று தருக.
3. C எனும் சாதனம், பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும்போது, எவ்வாறு அழைக்கப்படும்.
a. ஆய்வு கூடத்தில் b. வானொலி வாங்கியில்
4. a. ஒளிக்கு உணர்திறன் கொண்ட துணைச்சாதனம் எது?
c. ஒளி விழும்போது, அதன் தடைபெறுமானத்திற்கு யாது நிகழும்?
5. 1956 ஆம் ஆண்டு பௌதிகவியலுக்கான நோபெல் பரிசு சந்த' திரான் சிற்றரைக் கண்டறிந்தமைக்காக, மூன்று விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டது. அம்மூவரின் பெயர் யாது?
6. திரான் சிற்றரின் விரியலாக்கும் தொழிற்பாட்டுக்கான பெய்ப்புச்சுற்றையும், பயப்புச்சுற்றையும் வரைக.
7. இரண்டு இருவாயிகளைப் பயன்படுத்தி, முழு அலைச் சீராக்கத்திற்கான மின்சுற்றை வரைந்து காட்டுக.
8. குறை கடத்திச் சாதனங்கள் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் 2 தருக.

09. எவையேனும் ஐந்திற்கு விஞ்ஞானரீதியிலான விளக்கம் தருக.
1. ஐதரசன் பரவொட்சைட்டு கபிலநிறப் போத்தல்களில் இறுக்கமான மூடியிட்டுப் பாதுகாக்கப்படுகிறது.
2. செறிந்த வெல்லக் கரைசலினுள் இடப்பட்டுள்ள உணவு வகைகள் உண்ணக் கூடியநிலையில் நீண்டகாலத்திற்குப் பேணமுடிகிறது.
3. பீடை நாசினிகளின் பாவனை அங்கிகளின் குடித்தொகையைப் பாதிக்கும்.
4. கருக்கட்டப்படாத சூல்கள் பதர் வித்துக்களாகும்.
5. இரும்புத் துண்டு நீரில் அமிழ்கிறது. ஆனால், இரும்பாலான கப்பல் மிதக்கிறது.
6. X கதிர்களைக் காட்டிலும் அலகிடலி பயன்படுத்தப்படுவது அனுகூலமானது.

10. புவியின் மிகக்குறைவான பிரதேசத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உயிர்க்கோளம் பரந்து காணப்படுகின்றது. இவ்வுயிர்கோளத்தில் பல்வேறு ஒழுங்கமைப்பு மட்டங்கள் சீரான முறையில் அமைந்துள்ளன. சூரிய ஒளியிலிருந்து பெறப்படும் சக்தியிலேயே உயிர்கோளம் முற்று முழுவதுமாகத் தங்கியுள்ளது. சூழற்தொகுதியில் பதார்த்தங்களின் வட்டவடிவமான சுற்றோட்டம் உயிர்க்கோளத்தின் நிலவுகைக்கு மிகவும் இன்றியமையாததாகும்.
1. உயிர்கோளத்தில் காணப்படும் பல்வேறு ஒழுங்கமைப்பு மட்டங்களை வரிசைக்கிரமமாகத் தருக.
2. வளிமண்டலம் மண் அங்கிகள் ஆகியவற்றுக்கிடையே சுற்றோட்டத்திற்குள்ளாகும் மூலகங்கள் 4 தருக.
3. அங்கிகளின் உடலை ஆக்குவதில் பங்களிப்புச் செய்யும் மூலகங்களுள் காபனும் ஒன்றாகும். இம் மூலகம் தவிர வேறு இரு மூலகங்களைத் தருக.
4. வளிமண்டல நைதரசன் உயிரியல் ரீதியில் உயிர்ப்பற்ற நிலையில் உள்ளது. இக்கூற்றை விளக்குக.
5. வளமற்ற மண்ணிலும் வேர் சிறுகனுக்களைக்கொண்ட தாவரங்கள் செழிப்பாக வளருவது ஏன்?
6. அங்கிகளுக்கிடையே காணப்படும் நெருக்கமான தொடர்புகள் 2 தருக.
7. வெளிநாட்டு அங்கிகள் என்றால் என்ன?
8. சூழல் கற்கைக்குப் பயன்படுத்தப்படும் நுட்பங்களாக எதனைக் கருதுவீர்.
9. இயற்கைச் சமநிலை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
10. வனவிலங்குகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான இரு காரணங்கள் தருக?

தொகுப்பு: சி.பாலச்சந்திரன்
யா/பிளவத்தை அ.த.க.பாடசாலை.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

- திருக்குறள்

## நமது நோக்கு

### அதிகாரமுள்ள சபையே தேவை

"வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய கூடுதல் அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாக சபையை புலிகள் கேட்பதில் எந்தத் தவறும் கிடையாது"

இது - தமிழர் தரப்பிலிருந்தோ அல்லது ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத் தரப்பிடமிருந்தோ எழுந்துள்ள கருத்து அல்ல. எதிர்க்கட்சியான - அதுவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முதலமைச்சர் ஒருவரிடமிருந்து இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.

சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர் சாலிய எல்லாவெலவே இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார். இவ்வாறான கருத்து பொதுஜன ஐக்கிய முன்னணி சார்புடைய ஒருவரிடம் இருந்து வெளிவந்திருப்பது இதுவே முதற்தடவை எனக் கூறவேண்டும்.

ஜே.வி.பியினரும், பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவது, தனிநாடு ஒன்றைப் புலிகளிடம் கையளிப்பதற்கான முதற் செயற்திட்டம் என்றும், இது நாட்டைப் பிளவுபடுத்திவிடும் என்றும் குற்றம்சாட்டி, அதையே பெரும் பிரசாரமாக முன்னெடுத்து வருகின்றன.

இப்படிப்பட்ட சூழலில், பொ.ஐ.மு வசமுள்ள ஒரு மாகாண முதலமைச்சரிடம் இருந்து, புலிகள் இடைக்கால நிர்வாகசபையை - கூடுதலான அதிகாரங்களுடன் கோருவதில் தவறேதும் இல்லை என்ற கருத்து வெளியாகியிருக்கிறது.

அதுமட்டுமன்றி அவர் - விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் குறித்த தெளிவான கொள்கை இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இவரது இந்தக் கருத்து - அரசியல் ரீதியான கொள்கை முரண்பாட்டால் தோன்றவில்லை என்றாலும், யதார்த்தபூர்வமான - அனுபவத்தின் அடிப்படையிலானதாக அமைந்ததென்பதில் சந்தேகமில்லை.

1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதே, இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற கோணத்தில்தான். ஆனால், இந்த ஒப்பந்தத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட மாகாணசபை ஆட்சிமுறை- எந்தவிதமான அதிகாரங்களையும் கொண்டிருந்ததாகத் அமையவில்லை.

இன்று இந்த மாகாணசபை ஆட்சி, வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருக்கின்றபோதும் - அங்கு இந்த ஆட்சிமுறையின் குறைபாடுகளைத் தெளிவாகவே உணர்ந்திருக்கிறார்கள்.

ஒருகாலத்தில் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாணசபை ஆட்சிமுறையை இன்று சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணசபைகளே ஏற்றுக்கொள்ளவில்லை. அவற்றுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் போதவில்லை என்று சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.

அன்று மாகாணசபை தீர்வை தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தால், இதே அதிகாரமற்ற சபையைத்தான் வைத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

ஆனால், இன்று இந்த நிலை மாறிவிட்டது. அரசாங்கம் முன்வைத்த இடைக்கால நிர்வாகசபை புலிகளுக்கு திருப்தியளிக்காததால்தான் - அவர்கள் தாமாகவே புதிய தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

புலிகள் தயாரித்திருக்கும் தீர்வு யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையில் அதிகாரங்களைக் கொண்டதாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தீர்வுத்திட்டத்தை அரசாங்கம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். அதிகாரம் இல்லாத மாகாணசபை ஆட்சிமுறை குறித்து சுமார் பதினாறு வருடங்களுக்குப் பின்னர் சர்ச்சைகள் கிளம்பியுள்ளபோது-

நீண்டகாலப் பிரச்சினைகளின் அடிப்படையில் அமைந்த வடக்கு - கிழக்கு பகுதி வாழ் தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கு, நீண்டகால ஆராய்வுகளுடன் கூடிய தீர்வு முன்வைக்கப்படுதல் அவசியம்.

இப்போது, புலிகள் தயாரித்திருப்பது நிரந்தரமானதொரு தீர்வுத்திட்டம் அல்ல. இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைப்பதற்கான யோசனைகளையே புலிகள் தயாரித்துள்ளனர்.

இந்தத் தீர்வுயோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதன் விளைவுகள் பாரதூரமானதாக அமையுமென்பதையும் - புலிகளின் தரப்பு தெரிவித்திருந்தது. மூத்த தளபதி கேணல் கருணா இக்கருத்தை பாரிஸில் வெளிப்படுத்தியிருந்தார்.

பொ.ஐ.மு ஆட்சியிலுள்ள முதலமைச்சர் ஒருவரே அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாசபை கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளபோது - அரசாங்கம் அதை எந்தவிதத்திலாவது நிராகரிக்க முற்பட்டால், அது அமைதி முயற்சிகளுக்கு ஆரோக்கியமான செயற்பாடாக அமையாது.

## இலங்கை - இந்தியாவுக்கும் இடையிலான
# கப்பல் போக்குவரத்து தொடர்பான பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை மேற்கொள்வது தொடர்பான பேச்சுக்களை, இந்திய அரசாங்கம் இறுதி நேரத்தில் ஒத்திவைத்துள்ளது.

இந்தியக் கப்பற்துறை அமைச்சர் சத்துருக்கன் சின்ஹா இந்த வாரம் இலங்கைக்கு வந்து, கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை குறித்த பேச்சுக்களை நடத்தி, புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இந்தியக் கப்பல்துறை அமைச்சர் சத்துருக்கன் சின்ஹாவின் வருகை, இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

## அரச சேவையிலிருந்து விலகி மீளச் சேரமுடியாதோர்விபரம்

### சகல திணைக்களங்களிலும் திரட்டப்படுகிறது

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசசேவையில் இருந்து விலக்கப்பட்டு, மீளச்சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யமுடியாதவர்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு, வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கமலா சிவசிதம்பரம், வடக்கு- கிழக்கில் உள்ள சகல அரச திணைக்களங்களிடமும் இந்த விபரங்களைக் கோரியுள்ளார்.

பணியில் மீளச்சேர்க்கமுடியாத நபரின் பெயர், விலாசம், அவர் சேவையிலிருந்து விலக்கப்பட்ட திகதி மற்றும் அது தொடர்பான விபரங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கியதாக, இந்த விவரம் இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி விபரங்கள் அந்தந்தப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாரதி அனுமதி பத்திரத்தை ஒரேநாளில் வழங்கமுடியும்

### உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தை எனது அமைச்சுக்குக் கீழ் ஒப்படைத்தால், சாரதி அனுமதிப்பத்திரங்களை ஒரேநாளில் வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையை ஒரேநாளில் வழங்கும் நடவடிக்கையை ஆட்பதிவுத் திணைக்களத்தில் ஆரம்பித்து வைத்த பின்னர், அங்கு நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டின்போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து, ஆறு மாதம் காத்திருக்கும் மக்களுக்கு, நன்மை பயக்கும் பொருட்டு 500 ரூபா உடன்செலுத்தி, ஒரேநாளில் இப்போது அடையாள அட்டை பெறமுடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய அடையாள அட்டையை ஒரேநாளில் பெற்றுக் கொள்ள 1000 ரூபா செலுத்தவேண்டும் என்று ஆரம்பத்தில் கோரிக்கை விடப்பட்டிருந்தும், அமைச்சின் செயலாளர் யுனைட்டின் வேண்டுகோளின்படி, 500 ரூபாவாகக் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு!



எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களை, நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வேலை நிறுத்தங்கள் மூலம் அரசாங்கத்தை கவிழ்க்க திடசங்கற்பம் பூண்டுள்ள ஜே.வி.பியின் நடவடிக்கைளையும், அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சர்கள் கூறிய கருத்துக்கள் பற்றியும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலை நிறுத்தங்களை அரசாங்கம் தடைசெய்தால், அதற்கெதிராக என்ன மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கலந்துரையாடலில் பேசப்பட்டதாக அறியப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் - தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ச, ராஜா கொளுரே, பேரியல் அஷ்ரப், கே.என்.டக்ளஸ் தேவானந்தா, தர்மலிங்கம் சித்தார்த்தன். ஆகிய எதிர்கட்சித் தலைவர்கள் பங்குபற்றினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## போலி கடவுச்சீட்டு தயாரித்த இலங்கையர் இருவர் கைது!

(சென்னை)

சென்னையில் போலி கவுச்சீட்டுத் தயாரித்து விற்பனை செய்த இரு இலங்கையர்களை - பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அப்போது அங்கு போலியான இந்திய கடவுச்சீட்டின் 1000 தாள்கள், 6 இந்திய கடவுச்சீட்டுக்கள் - பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

இது சம்பந்தமாக இலங்கையைச் சேர்ந்த சகுணன் (வயது 40), அன்ரன் (வயது 36) ஆகிய இருவரும் கைதுசெய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டபோதே, இந்தக் கள்ளக் கடவுச்சீட்டுக்கள் தயாரித்து மும்பை, பெங்களூர், ஐதராபாத் ஆகிய பல நகரங்களுக்கு விநியோகம் செய்ததை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

சென்னை மேற்கு அண்ணா நகரிலுள்ள குடியிருப்பில் 20ஆவது தெருவிலுள்ள, ஒரு வீட்டில் வைத்தே கடவுச்சீட்டு தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும், இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### பிரிட்டன் பெருவிரல் அடையாளம் பெறுவதை

## இலங்கை உயர் நீதிமன்றினால் விசாரணை செய்ய முடியாது!

(கொழும்பு)

பிரித்தானிய அரசாங்கம் விசா வழங்கும்போது, பெருவிரல் அடையாளம் பெறப்படுவது சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு, இலங்கை உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லையென்று அரச தரப்பு வழக்கறிஞர் மர்சூர் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ பிரித்தானிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மனித உரிமை மீறலாகும். அத்தோடு இலங்கையின் கௌரவத்திற்கு இழுக்கானது என்று உயர்நீதிமன்றில் தாக்கல்செய்த வழக்கின் விசாரணையின் போதே, அரசாங்க வழக்கறிஞர் மர்சூர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக, பிரித்தானிய அரசு விசா வழங்கும்போது பெருவிரல் அடையாளம் பெறப்படுவது சம்பந்தமாக - இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உயர்நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு நீதியரசர் சரத் என்.டி.சில்வா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

### திருகோணமலை மாவட்டத்தில்

# வானாறு கிராமத்தின் பெயரை சிங்களத்தில் மாற்ற முயற்சி!

(திருகோணமலை)

கிண்ணியா - வானாறு முஸ்லிம் கிராமத்தைப் பந்தபுர என்று பெயர் மாற்ற எடுக்கும் நடவடிக்கையை, உடன் தடுத்துநிறுத்துமாறு சிறிலங்கா முஸ்லிம் ஆசிரியர் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட செயலாளர் ஏ.ஸீ.எம். முஸ்ஸில் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கிராமம் - கிண்ணியா நகரிலிருந்து தென்மேற்கே 16 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இரண்டு முஸ்லிம் பாடசாலைகளும், 4 பள்ளிவாசல்களும் காணப்படுகின்றன. இதன் அருகில் சிங்கள மக்களும் உள்ளதால், படிப்படியாக இது "வான்எல" எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.எம்.திடீர் தௌபீர்க் தலைமையில், நடைபெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில், இக்கிராமத்தின் பெயரை 'பந்தலுபுர ' என பெயர் மாற்றும் பிரேரணை நிறைவேற்றப்பட்டு, தற்போது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதனால், பெரும்பான்மையாக வாழும் இக்கிராமத்து மக்கள், பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி இருக்கும் வேளையில், இந்தப் பெயர் மாற்றம் - முஸ்லிம்களின் பூர்வீகத்தை மறைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையாகும் என்று முஸ்லிம் மக்கள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

# நிவாரணப் பணிக்கு கொடுத்த அழுத்தத்தை புனர்வாழ்வு, அபிவிருத்திக்கு மாற்றியுள்ளோம்!

**அண்மையில் சமாதானத்துக்கான சாமசூரி விருது பெற்றவரும், மனிதநேயப் பணிகளை மேற்கொள்ளும் கியூடெக் என அழைக்கப்படும் யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தின் இயக்குநருமான, வண. சி.ஜி.ஜெயக்குமார் அடிகளாருடன் ஒரு நேர்காணல் இங்கு தரப்படுகிறது.**

**அண்மையில் குருநாகல் மாவட்டத்தில் தலைமையகத்தைக் கொண்ட சாமசேவையர் என்ற அரச சார்பற்ற அமைப்பு வழங்கிய, சமாதானத்துக்கான 'சாமசூரி விருதினை' பெற்றிருக்கிறீர்கள். மனித மாண்பு, மனித நேயம், மனித அடிப்படை உரிமைகள், சமாதானம் என்பவற்றிற்காகத் தாங்கள் செய்த பணிகளும், ஓயாது துணிந்து கொடுத்துவந்த குரல்களுமே இதற்கு வழிவகுத்திருக்கின்றன என்று நினைக்கிறேன். இதுபற்றி தாங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

நற்செய்தி மதிப்பீடுகளின் வழியில், மனித விடுதலைக்காகவும், மனித அடிப்படை உரிமைகளுக்காகவும், சமாதானத்திற்காகவும்-அர்ப்பணிப்பதும், குரல் கொடுப்பதும் தான் உண்மையான கிறிஸ்தவம் என்பதில், அசையாத நம்பிக்கை கொண்டவன் நான். நீதிக்காகச் சமாதானத்திற்காக உழைப்பது, கிறிஸ்தவனாகத் திருமுழுக்குப் பெற்ற ஒருவர் மீது திணிக்கப்படும் ஒரு கடமையாகும்.


இப்பணியினை நாம் செய்யும் போது அல்லது குரல்கொடுக்கும் போது, அதனால் பாதிக்கப்படுபவர்கள் - எம்மீது சிலவேளை கோபப்படுவது தவிர்க்கப்படமுடியாததாக இருக்கலாம். 'காய்க்கிற மரத்திற்குத் தான் கல்லெறி விழும்' என்று சொல்லுவார்கள். நீதிக்காக, சமாதானத்திற்காக, மனித உரிமைகளுக்காக குரல்கொடுக்கும்போது, அதற்கு எதிராகச் செயறபடுபவர்கள் - எமக்கெதிராகச் செயற்படலாம். நான் காரசாரமானச் சில அறிக்கைகளை வெளியிட்டதும், உண்மையின் நிலையினைத் தெளிவாக எடுத்துக் காட்டியதும் - காலத்தின் கடப்பாடும், வரலாற்றின் தேவையுமாகும். திருச்சபை - அநீதி நடக்கும்போது மௌனம் சாதிக்குமாக இருந்தால், அதன் பணி முழுமையடையவில்லை என்று தான் நான் கருதுவேன். சமாதானம் செய்வோர் - பேறுபெற்றோர் என்று நற்செய்தியில் சொல்லப்பட்டிருக்கிறது. சமாதானம் செய்வது எமது கடமை என்ற தெளிவோடு இப்பணியினை ஆற்றியமைக்காக, இந்த விருது வழங்கப்பட்டிருக்கலாம் என நினைக்கிறேன்.

**இவ்விருதிற்காகத் தங்கள் பெயர் அறிவிக்கப்பட்டபோது, தங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது என்பது பற்றி ஏதும் சொல்லமுடியுமா?**

நான் செய்த பணி - மக்கள் மத்தியில் உணரப்பட்டு, அதன் வெளிப்பாடாக இவ்விருது கிடைத்தது என நினைத்து, நான் மனிதரீதியில் மிகவும் பெருமையும், மகிழ்ச்சியுமடைந்தேன். எனக்குத் தரப்பட்ட பணியை நான் முழுமையாகச் செய்ய முற்பட்டபோது, அதனை மற்றவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது - உண்மையிலே மகிழ்ச்சியான ஒரு விடயமாக இருந்தது. என் பணியினை இன்னும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்ற ஒரு உந்துதலும், ஊக்கமும் என்னுள் உருவானது. அதுமட்டுமல்ல, இனிமேல் ஒருபோதும் நான் சமாதானத்திற்கு எதிராகச் செயற்படமுடியாது என்ற அழுத்தத்தை எனக்குத் தந்துள்ளது. இனிமேல் இன்னும் அதிகமாகச் சமாதானத்திற்காக உழைக்க உறுதியெடுக்க வைத்துள்ளது.

**மனித முன்னேற்ற நிலையப்பணி பற்றியும், அதன் நோக்கம் நிறைவேறி வருகிறதா என்பது பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?**

எமது பணி பற்றி பொதுவாகவே மக்கள் அறிந்திருக்கிறார்கள். குறிப்பாக, வன்னிப்பிரதேச மக்கள் மிகவும் தெளிவாக அறிந்திருக்கிறார்கள். வலுவற்ற மக்களை - வலுவுள்ளவர்கள் ஆக்குவதே எமது பணி. தன்மானத்துடன், தன்னம்பிக்கையுடன் தனது காலில் நின்று, சுயமாக உழைக்கவும், வாழவும் வேண்டும் என்ற ஒரு விழிப்புணர்வை உருவாக்குவதே எமது பணி. பரிசுப் பொருட்களைச் சும்மா தூக்கிக்கொடுக்கும் கிறிஸ்மஸ் தாத்தா மனநிலைபோன்ற ஒன்றை உருவாக்குவது எமது பணியின் நோக்கமல்ல. அதாவது, இவர்களிடம் பொருள் இருக்கிறது. அதனை பெற்றுக் கொண்டு போய்விடுவோம் என்ற ஒரு குறுகிய மனநிலையை மாற்றி, எமது உதவியைப் பெற்று, அதன் வழி சுயமாகச் சிந்திக்கவும், சுய தொழிலில் ஈடுபடவும், மனித மாண்புடன் வாழவும் வழிசெய்வதே எமது




நோக்கமாகும்.

இந்த நோக்கம் நிறைவேறியிருக்கிறதென்றே நான் நம்புகிறேன். ஒரு தடவை சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில், பணம் பெற்ற விதவைச் சங்கத்தினருக்கு, மேலும் கடன் உதவியினைச் செய்ய முற்பட்டபோது, அவர்கள் தாமாகவே, இனியும் எங்களைக் கடனாளிகள் ஆக்கவேண்டாம். உங்கள் உதவியுடன் நாமாக உழைத்து முன்னேறப் போகிறோம் என்று தெரிவித்தார்கள். மேலும் சிலர் - எமது உதவியை வைத்துச் சுயதொழில் செய்து, அதன் வழி பாலர் பாடசாலைகளைத் தாமாகவே இயக்கிக்கொண்டும் வருகிறார்கள். இது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். தாமாகவே, சுயமாகச் சிந்திக்கவும், தொழில் செய்யவும் வேண்டும் என்ற ஒரு விழிப்புணர்வை, எமது பணியினால் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பது - எமது பணியின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது என்பதையே காட்டுகிறது.

**யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபையின் மனிதநேய நிவாரணப் பணிகளை, போராட்ட காலத்திலிருந்து நீங்கள் செய்து வந்திருக்கிறீர்கள். அதுபற்றிய விபரங்களை பத்திரிகைகளில் நாம் படித்திருக்கிறோம். இப்போ ஒரு அமைதியான சமாதான சூழல் தோன்றியுள்ளநிலையில், உங்களுடைய நிவாரணப் பணியின் முக்கியத்துவ அழுத்த வரிசையில் ஒரு மாற்றம் தோன்றியிருக்கிறது என்று நினைக்கிறீர்களா?**

1977 ஆம் ஆண்டு கலவரத்தின் பினனர், கிட்டத்தட்ட கடந்த 25 வருடங்களாகக் 'கியூடெக்' என அழைக்கப்படும் மனிதமுன்னேற்ற நிலையம்-தன் பணிகளை ஆற்றிவருகிறது. காலத்தின் தேவையை ஒட்டி, கத்தோலிக்க திருச்சபை - தனது இந்த மனிதநேயப் பணியினை ஆரம்பித்தது. 1977 இன் பின்னர்தான் இப்பணி நிறுவன மயப்படுத்தப்பட்டிருந்தாலும், ஆரம்பகாலம் முதல் - கத்தோலிக்க திருச்சபை இப்பணியினை ஆற்றியே வந்திருக்கிறது. திருத்தூதர் பணி நூலிலும், திருத்தந்தையர்களின் கூற்றுக்களிலும் இதனை நாம் அறிந்து கொள்ளலாம்.

எமது ஆரம்ப பணியாக- அக்காலத்தின் தேவையை ஒட்டி, நாம் நிவாரணப் பணியினைச் செய்ய ஆரம்பித்தோம். வன்னிப் பிரதேசத்து 14 ஆயிரத்து 700 மாணவர்களுக்கு, இலைக்கஞ்சி என்கின்ற சத்துணவு நிவாரணப் பணியினை இன்றும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். நிவாரணப் பணி முழுமையாக இன்னும் நிறுத்தப்படவில்லை. இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், எமது மனிதநேய நிவாரணப் பணிகளின் அழுத்தம் புதிய வடிவம் பெற்றிருக்கிறது.

இப்போ நாம் நிவாரணப் பணிகளிலிருந்து- புனர்வாழ்வு அபிவிருத்தி, மனித முன்னேற்றம் என்ற பணிகளுக்கு நகர்ந்திருக்கிறோம். அதன் வெளிப்பாடாகத் தீவுப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் வடக்கு ஆகிய இடங்களில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான - 600 வீடுகளை அமைத்திருக்கிறோம். யாழ்ப்பாணம், தீவகம், சாவகச்சேரி போன்ற இடங்களில் 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர்- 103 மலசலகூடங்களையும், 75 கிணறுகளையும் புனரமைத்து கொடுத்திருக்கிறோம். மேலும், மக்களை குழுமங்களாகக் கட்டியெழுப்பும் பணியை ஆற்றி வருகிறோம். இதன் வரிசையில் - 'சகோதர பகிர்வு வாழ்வு சங்கம்' என அழைக்கப்படும், பெண்களுக்கான சங்கங்களை நிறுவி, அவர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு, கடனுதவிகளை வழங்கி, சேமிப்பு பழக்கத்தை அவர்களிடம் உருவாக்க முற்பட்டிருக்கிறோம். மேலும், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதி, அவர்களின் உரிமை, சமத்துவம் என்பன பற்றிய தெளிவான விழிப்புணர்வையும், சரியான ஒரு பார்வையையும் கொடுக்க முற்பட்டு வருகிறோம். இதேபோல - விவசாயிகள், மீனவர்களுக்கும் இதுபோன்ற குழுமங்களை அமைத்து பணியாற்றியிருக்கிறோம். கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் 22 மில்லியன் ரூபாவினைச் சுழற்சிமுறைக் கடன் திட்ட அடிப்படையில் வழங்கியிருக்கிறோம். இதே செயற்திட்டத்தினை- வன்னிப் பிரதேசத்திலும் வழங்கியிருக்கிறோம். மேலும், ஆவணி மாதம் முதல் - 20 மில்லியன் ரூபா பெறுமதியான செயற்திட்டத்தை - யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் செயற்படுத்தவுள்ளோம். இதில் 150 வீடுகளையும், விவசாயிகள், மீனவ சங்கத்தினருக்கான உபகரணங்களையும் நாம் வழங்கவுள்ளோம். வன்னியில் முல்லைத்தீவு, அளம்பில் ஆகிய பிரதேசங்களில் இது நடைமுறைப் படுத்தப்படும். நாம் நிவாரணப் பணிகளுக்குக் கொடுத்த அழுத்தததினை, இப்போ புனர்வாழ்வு அபிவிருத்தி மனிதமுன்னேற்றம் என்பவற்றிற்கு மாற்றியிருக்கிறோம் என்பது, இப்போ உங்களுக்குத் தெளிவாக விளங்கியிருக்கும் என நம்புகிறேன்.

**உங்கள் நிவாரணப் பணிகளில்- கத்தோலிக்க மக்கள், இந்து மக்கள் என்ற ஒரு வேறுபாட்டினை கொண்டிருக்கிறீர்களா? கத்தோலிக்க அமைப்பு என்கின்ற வகையில், கத்தோலிக்கருக்கு மட்டும்தான் உதவவேண்டும் என்ற கண்டிப்பான சட்டங்கள் ஏதும் வைத்திருக்கிறீர்களா?**

யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபையின் மனிதநேயப் பணிகளை மேற்கொள்ளும், கியூடெக் என்னும் இந்த நிறுவனம் - நிச்சயமாக சாதி, மத, இன, மொழி என்ற வரையறைகளுக்கு அப்பாற்பட்டு செயல்பட்டிருக்கிறது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. யாராவது இதனை மறுத்து, இந்த வரையறைகளைக் கவனத்தில்கொண்டு, நாம் செயற்பட்டிருக்கிறோம் என நிரூபிப்பார்களேயானால், எனது இப்பணியினை நான் இராஜினாமாச் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்.

வன்னியில் இலைக்கஞ்சி சத்துணவு நிவாரணப்பணி வழங்கப்பட்ட 14 ஆயிரத்து 600 மாணவர்களுள்- 80 வீதமானவர்கள் இந்து சமயத்தவர். 1000 ரூபா சம்பளம் வழங்கப்படும் 107 தொண்டர் ஆசிரியர்களுள்- 70 வீதமானவர்கள் இந்துக்கள். ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் 93 வைத்திய உப ஊழியர்களுள் - 80 வீதமானவர்கள் இந்துக்கள். இதிலிருந்து நாம் தெளிவாகத் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், இந்த வரையறைகள் எம் பணியினைக் கட்டுப்படுத்துவதில்லை என்பதாகும்.

அண்மையில் மதிப்புக்குரிய அமைச்சர் ஒருவர் - தீவுப்பகுதியில் பிரான்ஸ் நாட்டு நிறுவனத்தின் அனுசரணையில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்ட உதவியில், ஒரு வீடு கூட இந்துக் குடும்பத்திற்கு வழங்கப்படவில்லை என, யாழ் நகரில் ஒரு கூட்டத்தில் பேசியிருந்தார். கியூடெக் உடனேயே இது தொடர்பான மறுப்பு அறிக்கை ஒன்றை பத்திரிகையில் பிரசுரித்து, இத்திட்டத்தில் 59 வீதமான உதவி இந்து மக்களுக்கே வழங்கப்பட்டது எனத் தெரிவித்திருந்தது.

அல்லைப்பிட்டியில் வழங்கப்பட்ட 105 தற்காலிக வீடுகளில் - 40 வீடுகள் இந்து மக்களுக்கும், மண்டைதீவில் வழங்கப்பட்ட 10 வீடுகளும் இந்து மக்களுக்கும், மண்கும்பானில் வழங்கப்பட்ட 35 வீடுகள் முழுவதும் இந்துக்களுக்கும், வேலணையில் 35 வீடுகளில் - 20 வீடுகள் இந்துக்களுக்கும், சாட்டியில் 37 விடுகளில்- 32 வீடுகள் இந்துக்களுக்கும் வழங்கப்பட்டதென்பது ஆதாரபூர்வமான உண்மையாகும். மொத்தமாகச் சொன்னால், 232 வீடுகளில் 137 வீடுகள் இந்துக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது நாம் பாரபட்சமின்றி செயற்படுகிறோம் என்பதையே காட்டுகிறது.



வண.ஜெயக்குமார் அடிகளார்

**மதமாற்றம் இன்று சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனப் நாடாளுமன்றச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று குரல் எழுப்பப்படுகிறது. நிவாரணத்தைக் கொடுத்து, மத மாற்றப் படுகிறது என்ற குற்றச்சாட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இவை பற்றிய உங்கள் கருத்து என்ன?**

கடந்தகால எமது மனிதநேய நிவாரணப் பணிகளில், ஒருவரையாவது நாம் மதம் மாற்றியிருக்கிறோம் என்று நிரூபிக்கப்பட்டால், நான் இப்பதவியை விட்டு விலக உடன் ஆயத்தமாக இருக்கிறேன் என்று தெளிவாகத் திரும்பவும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கத்தோலிக்க திருச்சபை இன்று மத மாற்றம் பற்றிய ஒரு தெளிவான கருத்துடனேயே இருக்கிறது. முன்பொருகாலத்தில் மதமாற்றப்பட்டது உண்மையாக இருக்கலாம். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர், மக்களை மேலும் மக்களாக மாற்றுவதே, கத்தோலிக்க திருச்சபையின் நோக்கமே அன்றி, மதம் மாற்றுவது அதன் நோக்கமல்ல. இந்த வகையில், திருச்சபையில் இயங்கும் கியூடெக் நிறுவனம்- கொள்கைரீதியில் மதம் மாற்றும் பணியில் ஈடுபடமுடியாது என நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்த ஒரு சில சபைகள் செய்கினற இந்த மதமாற்றச் செயற்பாட்டை வைத்துக்கொண்டு, தெளிவில்லாமல்- கிறிஸ்தவர்கள் மதம் மாற்றுகிறார்கள் என்று கூறப்படுகின்ற ஒரு குற்றச்சாட்டு உண்டுதான். உண்மையில், ஒருசிலர் எம்மிடம் வந்து, நீங்கள் எமக்கு உதவி செய்தால், உங்கள் திருச்சபைக்கு நாம் மதம் மாறுவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெளிவான விளக்கம் கொடுத்திருக்கிறோம். இந்த நோக்கத்தோடு எமது ஸ்தாபனத்தை நெருங்க வேண்டாமென்று தெரிவித்திருக்கிறோம். ◆

**நேர்காணல்**
**சாந்தகுமார்**

---

# தமிழ்பேசும் இளைஞர்களை விழிப்படையுமாறு கோரிக்கை

## அம்பாறை அரசியற்துறை அறிக்கை

தமிழ்பேசும் இளைஞர்கள் பொலிஸ் படையில் சேர்வது தொடர்பாக, விழிப்படையுங்கள் என்ற வேண்டுகோளுடன்- அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

எமது நாட்டில் சமாந்தரமாக இரண்டு படைகளுள்ளன, என்றநிலை தற்போது உள்ளது. பேரினவாதிகள் திட்டமிட்டு, மற்ற இனங்களை நசுக்கியபோது, முதலாவது படை வேடிக்கை பார்த்துக்கொண்டு சென்றது.


தமிழ் - முஸ்லிம்களுக்கிடைகுயேயான நட்புறவை சகித்துக் கொள்ளமுடியாத நிலையிலேயே பேரினவாதிகள் உள்ளனர்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் செயற்படும் தீயசக்திகளைக் கண்டு மக்கள் விழிப்பாயிருக்க வேண்டும்.

பொலிஸ் படையில் இணையும் தமிழ்பேசும் இளைஞர்களே சிந்தியுங்கள். விடுதலைப் புலிகளுடைய இராணுவத்தை எந்த இராணுவ சக்தியாலும் வென்றுவிடமுடியாது. நீங்கள் அதில் இணைவதை உடன் நிறுத்துங்கள். யுத்தம் மீண்டும் வந்தால், நீங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவர்கள். உங்கள் நிலை அப்போ பரிதாபகரமானது என வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறோம் என்று இந்த துண்டுபிரசுரத்தில் காணப்பட்டுள்ளது.

### ஈராக்கின் தலைமை

# பொலிஸ் காரியாலயம் மீது கார்க் குண்டுத் தாக்குதல்!



(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் - பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில், 14 பேர்வரை காயமடைந்துள்ளனர். அமெரிக்காவினால் நியமிக்கப்பட்டிருந்த தலைமைப் பொலிஸ் அதிகாரி ஹசன் அலி, சம்பவம் நடைபெற்ற நேரத்தில் அவ்விடத்தில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைமைக் காரியாலயத்தில் களவாடப்பட்ட கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிந்த கார் ஒன்றிலிருந்தே, குண்டு வெடித்தாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் காரியாலயத்திற்குப் பலத்த சேதம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய பொலிஸாரின் தாக்குதலில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்!



(புதுடெல்கி)

இந்தியாவின் பூனா மாவட்டத்தில் அமைந்த மலைப்பகுதியில்- பொலிஸார் நடத்திய தாக்குதலில் 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகுதியில், இரண்டு தாக்குதல்களில் 11 பேர்வரை கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. காஷ்மீரிய தீவிரவாதிகள் - ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண் உட்பட ஐவரைக் கொலை செய்துள்ளனர்.



சென்ற திங்களன்று - தீவிரவாதிகள், இந்தியாவுக்கும் காஷ்மீருக்கும் இடையே இருந்த பாலம் ஒன்றைத் தகர்த்தார்கள்.

“ஜெஷ் இ மொகமட்” என்ற குழுவைச் சேர்ந்த காஷ்மீரியத் தீவிரவாதியான “ஹசி பாபா” - பத்து ம்ணித்தியாலங்கள் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

அண்மைக் காலத்தில் நடைபெற்றுவரும் பல தாக்குதல்களுக்கு இவர் பொறுப்பாக இருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1999 இல் இவர் உள்நாட்டு விமானமொன்றை ஆப்கானிஸ்தானுக்கு கடத்திய சம்பவத்தில் தொடர்புபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

# சமாதான முயற்சிகளுக்கு அரபாத் தடையாகவுள்ளார்

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர்



(ஜெருசலேம்)

அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட பலஸ்தீனிய, இஸ்ரேலிய சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தடையாக உள்ளாரென, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் சாயுல் மொபாஷ் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனப் பிரதமர் மொஹமட் அபாசின் சமாதான முயற்சிக்கு இவர் ஆதரவு கொடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட சமதானத் திட்டத்தில் - பலஸ்தீனத் தீவிரவாதிகளைச் செயலிழக்கச் செய்வது, பலஸ்தீன அதிகாரிகளின் கடமையாகும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனப் பிரதமர் அபாசிற்குப் பாதிப்பு ஏற்படாதவாறு, அர்பாத் வெளியேற்றப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக, மேற்குக்கரை நகரான ரமழாவில் அமைந்த கட்டடத்தில், இஸ்ரேலியப் படைகளினால் அரபாத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்
சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை – முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை – முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்

- எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் “நமது ஈழநாடு” 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

ஐரோப்பிய நாடுகளில் மற்றும் நிரந்தர குடியேற்றத்திற்கும்



சிறந்ததோர் வாய்ப்பு



“நாங்கள் உங்களது சரியானதும் மிகச் சிறந்ததுமான தெரிவு”
கீழ்க்காணும் நாடுகளில் பல்கலைக்கழகம் அல்லது கல்லூரிகளில்
கல்விபெற வாய்ப்பு 2004 ஆம் ஆண்டுக்கான அனுமதி
பட்டப்படிப்பின் பின்னர் நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.
UK / USA/CANADA/AUSTRALIA/NEWZEALAND/MALAYSIA/
SINGAPORE/JAPAN AND EUROPEN UNION

- முதல் இரு ஆண்டுகள் ஐரோப்பிய சமூக நாடொன்றிலும், கடைசி வருடம் ஐக்கிய அமெரிக்கா / அவுஸ்திரேலியா நாடுகளிலும் நிறைவுபெறும்.
- முதல் இரு ஆண்டுகள் மலேசியாவிலும், கடைசி வருடம் அவுஸ்திரேலியா /ஐக்கிய இராச்சியம்/ ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் நிறைவுபெறும்.

இடிந்து போன எமது மாணவ சமுதாயம்
நாளை வெற்றிக்கொடியை நாட்டட்டும்
கனடா/அவுஸ்திரேலியா/நியூஸிலாந்து
ஆகிய நாடுகளில் குடியேற வாய்ப்பு
பட்டப்படிப்பின் அல்லது டிப்ளோமாவின் பின் மூன்று வருட அனுபவம் (ஆகக்குறைந்தது).

DEMAND CATAGORIES : NURSES / PHARMACIST / CHEF / HAIR DRESSER / REFRIGERATION AND AIR CONDITIONING MECHANICS / COM PUTER /PROFESSIONALS / STENOGRA PHERS.

- LONG TERM BUSINESS VISA.
- MIGRATION VISA.
- VISIT VISA.
- STUDENT VISA.

நீங்கள் இப்போது தயாரா?
அப்படியானால், முதலில் உங்கள் பெயரைக் கீழ்க்காணும் விலாசத்தில் ஒரு மாதத்திற்குள் பதிவு செய்து கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில்
திருமதி ஏ.துரைசிங்கம்
இலக்கம் 529, பலாலி வீதி,
(பரமேஸ்வராச் சந்தி,
Bank of ceylon க்கு அருகில்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் - 0777 322551

நீங்கள் செலுத்தும் ஒவ்வொரு ரூபாவுக்கும் உத்தரவாதம் உண்டு

காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரையும்,
பிற்பகல் 02.30 மணிமுதல் மாலை 05.30 மணிவரையும்.

கொழும்பில் : திரு. ரீ.ரீ.பிரகலாதன் (பிரபா)
நியூசீலன்ட் அக்கடமிக் சேர்விஸஸ் கொழும்பு (பிறைவேற்) லிமிட்டட்

யுனிட் 11, 2 ஆம் மாடி, லக்கி பிளாஸா,
இலக்கம் 70, சென்ற் அன்ரனீஸ் றோட், கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம் : 0777 798649 (Hot line), 074 - 714760
ஈமெயில் : Saipraha19@hotmail.com

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஐக்கிய நாடுகள் எயிட்ஸ் மாநாட்டில் ஜனாதிபதியே கலந்து கொள்வார்!

## ரிரோன் விட்டுக்கொடுப்பு

ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெறவுள்ள எயிட்ஸ் தொடர்பான அமர்வில் கலந்துகொள்ள - ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ விட்டுக்கொடுத்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி - ஐக்கிய நாடுகள் சபையில், எயிட்ஸ் தொடர்பான அமர்வு ஒன்று நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெறவுள்ள இந்த அமர்வுக்கு, வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ செல்லவிருந்தார்.

ரிரோன் பெர்னாண்டோ கூட்டத்துக்கு செல்லத் தயாராக இருந்த போது, ஜனாதிபதி தான் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் மூலமாகவே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இலங்கை அரசின் சார்பில் தான் கலந்துகொள்ள இருந்ததாகவும், பத்து நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான தூதுவர் மூலமாக கோபி அனானிடம் ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை அடுத்து, தனது பயணம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கையில் நிலவுகின்ற அரசியல் முரண்பாடுகளையும், ஒற்றுமையின்மையையும், சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தத் தாம் விரும்பவில்லை எனவும், இலங்கைக்கு இருக்கும் நற்பெயரைத் தொடர்ந்து காப்பாற்றவே தான் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்துக்கு செல்லாமல், ஜனாதிபதி செல்வதற்காக பயணத்திலிருந்து விலகிக்கொள்வதாகவும் - வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதற்கிடையில் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் கருத்துக் கூறும்போது,

போர் நிறுத்த உடன்படிக்கை, உயர் பாதுகாப்பு விடயம் தொடர்பாக அரசு ஒப்பந்தங்களைச் செய்யும்போது, ஜனாதிபதியைக் கேளாமல் செய்தது. தற்போது ஐக்கிய நாடுகள் சபையிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்ததில் எவ்வித மான குற்றமும் இல்லை என்று தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு, ஜனாதிபதி விடுத்த வேண்டுகோள் வெளிவிவகார அதிகாரிகள் ஊடாகவே விடுக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சருக்குத் தெரியாத வகையில், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுக்கு ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோள், வெளிவிவகார அமைச்சில் நிலவும் நிர்வாகத் தன்மையைச் சந்தேகிப்பதாக அமைகின்றது என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் - ஐக்கிய நாடுகள் சபையின் எயிட்ஸ் தொடர்பான அமர்வில் கலந்துகொள்வது யார் என்பது இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை.

# நான்கு நட்சத்திர ஹோட்டல் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்

இலங்கை வரும் உல்லாசப் பயணிகளைக் கருத்தில்கொண்டு யாழ்ப்பாணத்தில் நான்கு நட்சத்திரக் ஹோட்டல் அமைக்கப்படவுள்ளதாக உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

கடந்த ஏழு மாதங்களில் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 25 வீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு முதல் ஏழு மாதங்களில் 2 லட்சத்து 8 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இந்த ஆண்டு முதல் 7 மாதங்களில் 2 லட்சத்து 59 ஆயிரம் பயணிகள் வந்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றார்

இராணுவத்தில் கடந்த 35 வருடங்களாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா கடந்த மாதம் 28 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

இராணுவத்தில் மூன்றாவது நிலையில் கடமையாற்றிய இவர், இராணுவ பிரதி தலைமை அதிகாரியாகவும் பதவி வகித்தவர்.

1947.08.30 இல் பிறந்த இவர் தனது 55 வயதினைப் பூர்த்தி செய்ததையடுத்து இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் 1970 ஆம் ஆண்டு கடெற் அதிகாரியாக இராணுவத்தில் இணைந்து, 1971ஆம் ஆண்டில் 2ஆம் லெப்டினன்ட் ஆகப் பதவியேற்றார்.

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு இராணுவ நடவடிக்கைகளிலும் முக்கிய பங்கு கொண்ட இவர் இந்தியா, பாகிஸ்தான் உட்படப் பல நாடுகளில் இராணுவப் பயிற்சியைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் பரிதாப மரணம்

வீதியால் சென்றுகொண்டிருந்த வயோதிபர் மீது, மோட்டார் சைக்கிள் மோதியதில், அவர் கொல்லப்பட்ட சம்பவம் பருத்தித்துறையில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், பருத்தித்துறையைச் சேர்ந்த ஜோசப் என அழைக்கப்படும் வயோதிபரே மரணமடைந்தாகத் தெரியவருகிறது.

இது தொடர்பான விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி வயோதிபரது பிரேத பரிசோதனை நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் நடைபெற்று சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

### முக்கிய கலந்துரையாடல்

வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஓட்டோ உரிமையாளர்களுக்கும் - வலிகாமம் கோட்ட அரசியற்துறையினருடனான கலந்துரையாடல், இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் வர்த்தக சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையிலிருந்து

# இடைநிறுத்தப்பட்ட ஊழியர்கள் தனித்தனியாக மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆட்குறைப்பு என்னும் பெயரில் இடைநிறுத்தப்பட்ட, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பணிபுரிந்த 152 ஊழியர்களும், நேற்றுக்காலை 11 மணியளவில் தமது மகஜர்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளனர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர், ஒருவார கால அவகாசத்தினை ஊழியர்களிடம் கேட்டுள்ளார். அதேவேளை, சீமெந்துக் கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் இப்பிரச்சினை தொடர்பாக தாம் எடுத்துக் கூறியுள்ளதாகவும், மிக விரைவில் இதற்குரிய தீர்வினைத் தாம் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக, சீமெந்து தொழிற்சாலையின் ஊழியர் சங்கத் தலைவர் பாலகிருஷ்ணன் தெரிவிக்கையில்,

எமது தொழிற்சாலை ஊழியர்கள் கடந்த பல ஆண்டுகளாக பணிபுரிந்துள்ளனர். மேற்படி 152 பணியாளர்களும் திடீரென இடைநிறுத்தப்பட்டதுடன், அவர்களது சம்பளங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால், அவர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய தீர்வினை தரவேண்டுமெனவே நாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# ஐ.தே.மு அரசு ஆட்சியிலிருந்தால் நாடு மோசமான நிலையை அடையும்

## அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேலும் இரண்டு வருடங்கள் ஆட்சியில் இருந்தால், நாடு மிகவும் மோசமான நிலைக்கு முகம் கொடுக்க வேண்டிவருமென்று - பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் நடத்திய பொதுக் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு வருவதன் மூலம் அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாடு தெளிவாக வெளிப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 52 ஆவது சம்மேளனக் கூட்டம் நேற்று குருநாகலில் நடைபெற்ற போது, அநுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்துக்கு - ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமை வகித்தார்.

# புலிகளின் திட்டவரைபினை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

பாரிஸில் விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள, வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபினை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டதாக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று - புத்தளத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் 52 ஆவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது -

விடுதலைப் புலிகள் முன்வைக்கும் விடயங்களை நிறைவேற்றுவதில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முதுகெலும்பு அற்றவர்களாக இருந்து செயற்பட்டு வருகின்றனர்.

இந்தவகையில் விடுதலைப் புலிகள் தற்போது தயாரித்துள்ள வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபையையும் அரசு ஏற்றுவிட்டது.

அரசாங்கம் விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கும் வகையிலேயே அரசியலை நடத்தி வருகின்றது. இதனால் நாட்டு மக்களைப் பாதுகாக்கின்ற கடமையிலிருந்து அரசாங்கம் தவறிவிட்டது.

புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தமது பிரதான நோக்கம் அல்ல எனத் தெரிவித்த ஜனாதிபதி, தமிழ் முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவதையே தாம் விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

நாடு மோசமான நிலைக்குச் சென்றால் தமக்கிருக்கின்ற நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த தயங்கமாட்டேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (01)

### பசுபிக்....

ரஷ்யா, கனடா உள்ளிட்ட 24 நாடுகளின் இராணுவத்தளபதிகள் கலந்து கொள்கின்றனர்.

கடந்த 31 ஆம் திகதி ஆரம்பித்த இந்த மாநாடு நாளைவரை தொடர்ந்து நடைபெறும்.

### அல் - கொய்டா....

நடத்தவே அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை - இலங்கையில் அதிகாரத்திலுள்ள அதிகாரிகள்கூட, பாரிஸில் விடுதலைப் புலிகளின் கலந்துரையாடலுக்கு எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

ஏற்கனவே, விடுதலைப் புலிகள் பல நாடுகளில் கூட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள். அல்-கொய்டா போன்ற அமைப்பாக இல்லை என்ற காரணத்தாலேயே, விடுதலைப் புலிகள் அந்த நாடுகளில கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டார்கள. அதுபோலவே நாமும் பாரிஸில் கூட்டம்நடத்த அனுமதித்துள்ளோம்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகளுடன்.....

கடந்த காலங்களில் பேச்சுக்களை நடத்தியிருந்தார். அதிகாரிகள் மட்டத்தில் இருப்பவர் இவ்வாறான பேச்சுக்களை நடத்துவதை அமெரிக்கா ஒருபோதும் குற்றமாகக் கருதவில்லை. விடுதலைப் புலிகள் ஏனைய நாட்டுத் தூதுவர்களுடன் கலந்துரையாடுவது யாவரும் அறிந்த விடயமாகும்.

அமெரிக்காவில் - விடுதலைப் புலிகளின் தடையை நீக்குவதற்கு முன்னின்றவர்களில் உருத்திரகுமாரனும் ஒருவர். நீண்டகாலம் இவர் அமெரிக்காவில் சட்டத்தரணியாக வாழ்ந்துவருகின்ற அதேவேளை, விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பு இல்லை என்று வாதிட்ட சட்டத்தரணி உருத்திரகுமாரன் என்பதும் தமக்குத் தெரியும். இவையெல்லாவற்றையும் அமெரிக்கா குற்றமாகக் கருதவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

### யப்பானிய....

ளுடன் புலிகளின் பிரதிநிதிகள் இலங்கை வரும் நேரத்தில் யசூசி அகாசியின் இலங்கை விஜயம் இடம்பெறும் என, அரச வட்டாரங்கள கருத்துத் தெரிவித்துள்ளன.

அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வன் தலைமையிலான குழு இலங்கைக்கு வந்து தலைவர் பிரபாகரனோடு ஆராய்ந்த பின்பு மீண்டும் பாரிஸ் நகரத்திற்குச் சென்று இடைக்கால நிர்வாகசபை வரைபு பற்றி ஆராயும் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### இந்திய....

கடந்த முதலாம் திகதி விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்தியப் படையதிகாரிகள் குழுவுடன், நேற்று முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள பலர் சந்தித்துக் கலந்துரையடியிருந்தனர்.

இவர்கள் - தமது ஐந்துநாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நாளை மறுதினம் இந்தியாவுக்குத் திரும்பவுள்ளனர்.

### பாலா நீக்கப்பட்ட...

மாநாட்டினை கூட்டியிருந்தோம். ஆனால் அவருடைய உடல் நலம் இயலாத காரணத்தினால் அவர் அங்கே சமூகமளிக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் நாங்கள் அவ்வப்போது தொடர்பு கொண்டு அவருடைய ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டே இந்த இடைக்கால நிர்வாக வரைபை உருவாக்கியிருக்கின்றோம்.

இதனை அரசியல் வங்குரோத்து சிந்தனையில் இருப்பவர்கள் பிரச்சாரமாக எடுத்து பல கட்டுக்கதைகளை கட்டி விடுவதும், உண்மையில் ஒரு வேதனைக்குரிய விடயமாகும். உடல் நிலை பாதிப்புக்குள்ளாகி இயலாமல் இருக்கும் ஒருவரை, மனிதாபிமான நெருக்கடியினை சந்தித்துக் கொண்டிருக்கும் ஒருவரை, தங்களுடைய அரசியலுக்கு பயன்படுத்திக் கொண்டிருப்பது எங்களுக்கு மிகவும் அதிர்ச்சியாகவும், வேதனையாகவும் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.43 | 96.96 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.07 | 152.60 |
| 1 யூரோ | 105.09 | 106.45 |
| 1 சுவிஸ் பிராங் | 68.20 | 69.40 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.65 | 62.85 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.81 | 25.81 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.